திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 62 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 3,81,31,26,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

8. அறிவிப்பு

நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்) பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு மாண்புமிகு நிதியமைச்சர்.